பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**27 03 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வரும் நிதியாண்டுக்கான நிதி மசோதா இன்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

2. பாதுகாப்புத் துறைக்கு இரண்டு லட்சத்து **38** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தளவாடங்கள் கொள்முதல் செய்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் தலைமையிலான குழு ஒப்புதல் அளித்துள்ளது.

3. பெட்ரோல், டீசல் விலையை கட்டுக்குள் வைத்திருப்பதற்காக அதன் மீதான கலால் வரி குறைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. நேபாளத்தில் திரு பாலேந்திர ஷா தலைமையிலான புதிய அரசு இன்று பதவியேற்றது.

5. அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Abhinav Sanjeev — Manish Suresh Kumar** இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

வரும் நிதியாண்டுக்கான நிதி மசோதாவுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

மக்களவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா, இன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.

அவையில் இதனை மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தாக்கல் செய்தார்.

இம்மசோதா மீதான விவாதத்துக்கு பதிலளித்து பேசிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பல்வேறு சீர்திருத்தங்களை அடிப்படையாக கொண்டு இந்த நிதி மசோதா தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் இம்மசோதா தயாரிக்கப்பட்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

முன்னதாக, இம்மசோதா மீதான விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு சக்தி சிங் கோஹில், வரி கட்டமைப்பில் பெரிய மாற்றங்கள் ஏதுவும் செய்யப்படவில்லை என்று கூறினார்.

நடுத்தர மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில், இவ்வாண்டுக்கான பட்ஜெட்டில் எந்த அறிவிப்பும் இடம்பெறவில்லை என்று அவர் கூறினார்.

வெளிநாட்டு முதலீடுகளுக்கு மட்டும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிஜேபி உறுப்பினர் திரு சஞ்சய் சேத் பேசுகையில், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், கடனுக்கும் இடையிலான விகிதாச்சாரம் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த **2008-2009-**ஆம் ஆண்டில் ஏழு புள்ளி ஐந்து சதவீதமாக இருந்த நிதி பற்றாக்குறை, தற்போது நான்கு புள்ளி மூன்று சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

சிறிய வகை குற்றங்களுக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிப்பதற்கான மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை தாக்கல் செய்து பேசிய வர்த்தக தொழில்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா, சிறிய வகை குற்றங்களை

குற்றவியல் நடைமுறைக்கு உட்படுத்தாமல், மாற்றாக அபராதம் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

குற்றங்களை முறைப்படுத்துவதற்கும் இம்மசோதா வகை செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது நடைமுறையில் உள்ள 79 சட்டங்களை திருத்தியமைக்க இந்த மசோதா வகை செய்வதாக அவர் கூறினார்.

சிறிய வகை குற்றங்களுக்கு மட்டும் அபராதம் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளதாகவும், பெரிய குற்றங்கள் மற்றும் விதிமீறல்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டின் பாதுகாப்புத்துறைக்கு தேவையான 2 லட்சத்து 38 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையிலான குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய ராணுவத்திற்கான வான்வழி பாதுகாப்பு

கண்காணிப்பு கட்டமைப்பு, பீரங்கிகள், தனுஷ் துப்பாக்கி கட்டமைப்பு, வான்வழி கண்காணிப்பு கட்டமைப்பு உள்ளிட்டவை கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விமானப்படையில் மத்திய ரக போர் விமானங்கள் மற்றும் எஸ்-400 ஏவுகணை கட்டமைப்பு, சுகோய்-30, விமான என்ஜின்கள் உள்ளிட்டவை கொள்முதல் செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மேற்காசிய பகுதியில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துவரும் போதிலும், உள்நாட்டில் பெட்ரோல், டீசல் விலையை கட்டுக்குள் வைத்திருப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உள்நாட்டு பயன்பாட்டுக்கான பெட்ரோல் மற்றும் டீசலுக்கான கலால் வரி குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பெட்ரோலுக்கு லிட்டருக்கு 13 ரூபாயாக இருந்த கலால் வரி, 10 ரூபாய் குறைக்கப்பட்டு, 3 ரூபாயாக நிர்ணயம்

செய்யப்பட்டுள்ளதாகவும், டீசல் மீதான கலால் வரி முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

விமான எரிபொருள் ஏற்றுமதியை குறைக்கும் வகையில், அதற்கான வரி உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்தின் தாக்கத்தை குறைக்கும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

நேபாளத்தில் ராஷ்ட்ரிய ஸ்வதந்திர கட்சித்தலைவர் திரு பாலேந்திர ஷா தலைமையிலான புதிய அரசு இன்று பதவியேற்றது.

பிரதமராக திரு பாலேந்திர ஷா பதவியேற்றபின் உள்துறை, நிதித்துறை, தகவல் தொடர்பு, வெளியுறவுத்துறை, கலாச்சாரம் மற்றும் சிவில் விமான போக்குவரத்து உள்ளிட்ட துறைகளுக்கான அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.

நேபாளத்தின் வெளியுறவுத்துறை அமைச்சராக பதவியேற்றுள்ள திரு **Shisir Khanal**-க்கு, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகாலம் நீடித்துவரும் நட்புறவு, புதிய அரசோடு இணைந்து வலுப்பெறும் என்று தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

சிமெண்ட் மற்றும் கட்டுமானப் பொருட்கள் உற்பத்தித்துறையில், திறன் மேம்பாட்டை வலுப்படுத்தும் நோக்கில் தேசிய சிமெண்ட் உற்பத்தி குழுமம், அல்ட்ரா டெக் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய வர்த்தக தொழில் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கட்டுமானப் பொறியாளர்கள், சிமெண்ட் கலவை தயாரிப்போர், ஒப்பந்ததாரர்கள், கட்டுமானப் பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களின் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதி மற்றும் உள்கட்டமைப்புத் துறைகளில் தேவையை கருத்தில்கொண்டு, இந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் வர்த்தக தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

தென்காசி மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்த **80** லட்சம் ரூபாய் பணத்தில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து, **63** லட்சம் ரூபாய் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக மாவட்ட ஆட்சியர் திரு கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — கமல்கிஷோர் - 40 Sec. )***

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா, கோவா மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் உள்ளிட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு **15-**ஆவது நிதிக்குழு மானியமாக **592** கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

இதுதொடர்பாக பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இந்த நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பான குடிநீர் விநியோகம், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு, நீர் மறுசுழற்சி கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பான கழிப்பிட வசதி

போன்ற தேவைகளுக்கு இதனை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

கொச்சி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள இந்திய கடற்படையின் ஐ ஓ எஸ் சாகர் போர் கப்பல் மூலம் மேற்கொள்ளப்பட்ட மண்டல கடல்சார் ஒத்துழைப்புக்கான பயிற்சி வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய பெருங்கடல் பகுதியில் பாதுகாப்புத் திறனை வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடல்சார் சுற்றுச்சூழலை மேம்படுத்துவது, பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்வது, கடல் கொள்ளையை தடுப்பது, சட்டவிரோத மீன்பிடித்தல் மற்றும் அத்துமீறி நுழைவதை தடுப்பது போன்றவற்றில் இந்த பயிற்சி அளிக்கப்பட்டது.

16 நாடுகளை சேர்ந்த மாலுமிகள் இந்த பயிற்சியில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Abhinav Sanjeev — Manish Suresh Kumar** இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-2, 6-1** என்ற செட் கணக்கில், இத்தாலியின் **Alexandr Binda —** ரஷ்யாவின் **Timofei Derepasko** இணையை வென்றது.

----------------

துனிசியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah — Diya Chitale** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் இந்த இணை, **11-6, 11-5, 11-0** என்ற செட் கணக்கில், துருக்கியின் **Abdullah Yigenler — Ece Harac** இணையை வென்றது.

------------------

ஆசிய கோப்பை வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா பத்து பதக்கங்களை வென்றுள்ளது.

பாங்காக்கில் நடைபெற்ற முதல்கட்ட போட்டியில், இரண்டு தங்கம், நான்கு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**<<<<<<END>>>>>>**